

புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2051 | பிப்ரவரி 06, 2020 | புரட்சி 19 | முழக்கம் 04 | விலை: ரூ.3.00

# இல்லாத சரஸ்வதி நதி – நிதிநிலை அறிக்கைக்குள் எப்படி வந்தது?

*2020-21ஆம் ஆண்டுக்கான மத்திய பட்ஜெட்டை நாடாளுமன்ற மக்களவையில் தாக்கல் செய்த மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் சிந்து சமவெளி நாகரிகத்தை 'சரஸ்வதி சிந்து நாகரிகம்' என்று பல முறை குறிப்பிட்டார். அமைச்சரின் இந்த பேச்சுக்கு பல்வேறு தரப்பிலிருந்து கண்டனங்களும் விமர்சனங்களும் எழுந்துள்ளன. மத்திய அமைச்சரின் பேச்சை விமர்சித்துள்ள மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மதுரை மக்களவை உறுப்பினர் சு.வெங்கடேசன், ஊடகத்திற்கு அளித்துள்ள பேட்டியில் கூறியிருப்பதாவது:*

*நிதியமைச்சர் முதலில் தவறாகப் படிக்கிறார் என்று எண்ணினேன். ஆனால், அவர் மீண்டும் மீண்டும் 'சரஸ்வதி சிந்து நாகரிகம்' என்றே குறிப்பிட்டார். இது புதிதல்ல. ஆர்.எஸ்.எஸ் தொடர்ச்சியாக இதையே சொல்லிக் கொண்டிருக்கிறது. இந்துத்துவவாதிகள் இந்திய வரலாற்றை புதியதாக கட்டமைக்க இதைத்தான் பயன்படுத்தி வருகிறார்கள். வேதப் பண்பாடுதான் இந்தியப் பண்பாடு. வேத நாகரிகம் தான் இந்திய நாகரிகம் என்று மீண்டும் மீண்டும் நிறுவ நினைக்கிறார்கள். அதற்கான குறியீடாகத்தான் சரஸ்வதி நதியை பயன்படுத்துகிறார்கள்.*

*சரஸ்வதி நதி என்று ஒரு நதி இல்லை. அது இலக்கியத்தில் கூறப்பட்டுள்ளது. சரஸ்வதி நதி இல்லாமல் போன நதி என்று கூறுகிறார்கள். அப்படிப்பார்த்தால் தமிழ் இலக்கியத்திலும் பல நதிகள் பற்றி கூறப்பட்டுள்து. பஃறுளியாறு என்று தமிழ் இலக்கியத்தில் கூறப்பட்டுள்ள ஆறு இன்று இல்லை. அதைக் கண்டுபிடிக்க 1000 கோடி ரூபாய் ஒதுக்குவார்களா?*

*சரஸ்வதி நாகரிகம் என்று இவர்கள் கூறுவது வேதகால நாகரிகத்தை, பண்பாட்டை. உலகம் முழுவதும் நாகரிகத்தின் அடையாளமாக இரண்டு விஷயங்கள் கூறப்படுகின்றன. ஒன்று செங்கல். இன்னொன்று பானை. ஆனால் வேதத்தில் செங்கல் மற்றும் பானையின் பயன்பாட்டைப் பற்றி எதுவும் கூறப்படவில்லை. மாறாக, செங்கல் மற்றும் பானையை பயன்படுத்துபவர்களை அசுரர்கள் என்று திட்டுகிறது வேதம். எந்த இடத்திலும் கற்களை வைத்து யாகம் நடத்திவிட்டு அங்கிருந்து செல்லக் கூடியதுதான் வேதத்தின் பண்பாடு. ஆனால் சிந்து சமவெளி நாகரிகம் அப்படியானதல்ல. சுட்ட செங்கற்களால் ஆன பிரம்மாண்டமான கட்டடங்களைக் கொண்டிருந்த மிகப்பெரிய நாகரிகத்தின் குறியீடு அது. வேதகாலத்தில்தான் இந்திய வரலாறு தொடங்கியது என்பதை மீண்டும் மீண்டும் நிரூபிக்க நினைக்கிறார்கள். சிந்து வெளி நாகரிகத்தை வேத நாகரிகமாக மாற்றுவது அல்லது வேத நாகரிகத்தின் அம்சங்களை சிந்துவெளி நாகரிகத்தில் பொருத்தி அதை எங்களுடையது என்று உரிமை கோரும் வேலையை பொருளாதார நிதிநிலை அறிக்கையில் செய்கிறார்கள். வேதத்தில் வந்த சொல்லை எடுத்து அதை சரஸ்வதி சிந்து நாகரிகத்தில் இருக்கும் சொல் என்று இவர்கள் சொல்வது அதிர்ச்சியாக இருக்கிறது.*

*இந்தியா மட்டுமல்லாது உலகம் முழுவதும் உள்ள தொல்லியல் அறிஞர்கள் 100 ஆண்டுகள் ஹரப்பா, மொஹஞ்சதாரோவில் ஆய்வு செய்துள்ளார்கள். எவ்வளவோ எழுத்துகள் அங்கு கிடைத்துள்ளன. ஆனால் அவை இன்னும் படிக்கப்படவே இல்லை. ஆனால், போகிறபோக்கில் அதன் பொருளை நிதியமைச்சர் சொல்கிறார். சரஸ்வதி சிந்து நாகரிகம் என்று மீண்டும் மீண்டும் கூறிவிட்டு, அதன்பின் ஆதிச்சநல்லூர் உள்ளிட்ட ஐந்து இடங்களில் தொல்லியல் அருங்காட்சியகம் அமைக்கப் படும் என்று கூறும்போது எச்சரிக்கையாக இருக்க வேண்டியுள்ளது. ஆதிச்சநல்லூர் இரண்டாம் கட்ட அகழாய்வை மத்திய தொல்லியல் துறை 2005ஆம் ஆண்டில் நடத்தி முடித்து, இப்போது 15 ஆண்டுகள் ஆகிவிட்டன. இப்போதுவரை அந்த அகழாய்வின் அறிக்கை வெளியாகவில்லை. இந்நிலையில் அருங்காட்சியகம் குறித்து பேசியுள்ளீர்கள். உங்களுக்கு என்று ஓர் அரசியல் உள்ளது. 100 ஆண்டுகள் சர்வதேச சமூகம் விஞ்ஞானப்பூர்வமாக செய்த ஆய்வையே மறைத்து சரஸ்வதி சிந்து நாகரிகம் என்று சொல்லும்போது ஆதிச்ச நல்லூரை அவர்கள் என்ன வேண்டுமானாலும் சொல்ல வாய்ப்புள்ளது. எனவே அதை மிகுந்த எச்சரிக்கையோடும் கவனத்தோடும் தான் அணுக வேண்டும். கீழடியிடம் பாஜகவால் நெருங்க முடியாது கீழடி என்பதே மத்திய பாஜக அரசுக்கு எதிரான ஒரு குறியீட்டுச் சொல். கீழடியில் எதுவுமே இல்லை, அங்கு வரலாற்றுத் தொடர்ச்சி இல்லை என்று கூறி மத்திய அரசு வெளியே வந்தது. அவர்கள் சொன்னது தவறு என்பதை நான்காம் கட்ட அகழாய்வில் தமிழக அரசு நிரூபித்துள்ளது. எனவே அவர்கள் இப்போது கீழடியிடம் நெருங்க முடியாது. அப்படி செய் தால் அவர்கள் சொன்னது பொய் என்று நிரூபணம் ஆகிவிடும் என்பதால் ஆதிச்சநல்லூரிடம் வருகிறார்கள்.*

*ஆதிச்சநல்லூரின் அகழாய்வு முடிவுகளே இன்னும் வெளிவராத போது எதை வைத்து அருங்காட்சியகம் அமைக்கப்போகிறீர்கள்? எந்தக் கருத்தில் நின்று அந்த அருங்காட்சியகத்தைக் காட்சிப் படுத்தப் போகிறீர்கள்? வெறும் சொற்களைக் கொண்டு தமிழ் சமூகத்தை ஏமாற்றி விட முடியாது. பொருளாதார ஆய்வறிக்கை திருக்குறளைக் கொண்டு தொடங்குகிறது. பிரதமரும் எல்லா இடங்களிலும் திருக்குறளை சொல்கிறார்.*

(4ஆம் பக்கம்)

## 'பட்ஜெட்'டில் சமூக நலத் திட்டங்கள் புறக்கணிப்பு

*நாட்டின் பொருளாதார நெருக்கடி, வேலை வாய்ப்புகள் குறித்து எந்தத் திட்டமும் நிதிநிலை அறிக்கையில் இடம் பெறவில்லை. குறிப்பாக மக்களிடம் பணப்புழக்கம் இல்லை. கிராமப் பொருளாதாரம் மிக மோசமான நிலையில் இருக்கிறது. இதற்கான திட்டங்களை முன் வைக்காமல் கார்ப்பரேட் நலன்களையே குறி வைத்து தயாரிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, சமூக நலத் துறைக்கான நிதிகள் கணிசமாகக் குறைக்கப்பட்டுள்ளன.*

- *கிராமப்புற ஏழை மக்களுக்கு மிகவும் பயனளிக்கும் மகாத்மா காந்தி ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் ரேஷன் கடைகள் வழியாக உணவு விநியோகம் என்ற இரண்டு திட்டங்களும் கடும் நெருக்கடி நிலையிலும் கிராமப்புற ஏழை மக்களைப் பாதுகாத்து வந்தன. இத்திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு இப்போது குறைக்கப்பட்டிருக்கிறது.*
- *கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்துக்கு 61,500 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் (2019-20) இத்திட்டத்தைச் செயல்படுத்த ரூ.71,000 கோடி தேவை என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. ஆனால் இதில் 10,000 கோடி ரூபாய் குறைக்கப்பட்டுவிட்டது. கடந்த ஆண்டு ஒதுக்கப்பட்ட 60,000 கோடி ரூபாயைவிடவும் குறைவாக ஒதுக்கப்பட்டுள்ளது. வேலை இல்லாத் திண்டாட்டம் கடந்த 40 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு அதிகரித்துள்ள நிலையில் கிராமப்புற ஏழை மக்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கும் திட்டத்தை நெருக்கடிக்குள்ளாக்கியிருக்கிறது. ஏற்கனவே இதில் வேலை செய்யும் மக்களுக்கு ஊதியத் தொகை உயர்த்தியிருக்க வேண்டும். அப்போதுதான் கிராமப்புற மக்களின் வாங்கும் திறனும் நுகர்வுத் திறனும் பயன்பாடும் அதிகரிக்கும்.*
- *உணவுப் பொருள் இருப்பு கூடுதலாக 600 டன் இருந்தும் கடந்த ஆண்டு கடும் உணவு நெருக்கடி நிலவியது. பசியால் வாடுவோரின் எண்ணிக்கை நாடு முழுதும் அதிகரித்திருப்பதை புள்ளி விவரங்கள் உணர்த்துகின்றன. இந்த நிலையில் உணவு ரேஷன் விநியோகத்தை மேலும் விரிவாக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்புகள் இருந்தன. மிகவும் பின் தங்கிய மாவட்டங்களில் ரேஷன் அளவை கூடுதலாக்கியிருக்க வேண்டும். ஆனால் நிதிநிலை அறிக்கையில் போதுமான நிதி ஒதுக்கீடு இல்லை. தேசிய உணவுப் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் ரேஷன் முறையில் உணவு விநியோகம் இருந்தும்கூட அது குறித்து கவலைப்படவில்லை. 2020-21க்கான உணவு மான்யமாக ஒதுக்கப்பட்டுள்ள தொகை 1.11 இலட்சம் கோடி. இப்போது கடந்த ஆண்டைவிட கூடுதலாக மிகக் குறைந்த அளவே ஒதுக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு ஒதுக்கப்பட்டது 1.08 இலட்சம் கோடி. கடந்த ஆண்டே இத் திட்டத்துக்குத் தேவையான மதிப்பீட்டுத் தொகையைவிட குறைந்த அளவே ஒதுக்கப்பட்டது.*
- *கடந்த சில ஆண்டுகளாக 'இந்திய உணவு கார்ப்பரேஷனுக்கு' கடன் தொகையாக சிறு சேமிப்பு நிதியிலிருந்து வழங்கப்பட்டு வந்தது. இந்தக் கடன் தொகையை உணவு வழங்குவதற்கான பற்றாக்குறைக்குப் பயன்படுத்துவதே இதன் நோக்கம். ஆனால் 2018-19 இல் உணவு மான்யமாக அரசு விடுவித்த தொகை 1.7 இலட்சம் கோடி மட்டுமே! நிதிநிலை அறிக்கையில் இந்த தகவல்கள் இடம் பெறாமல் திட்டமிட்டு மறைக்கப்பட்டுள்ளது. உணவு மான்யத்தைக் கடனாக வழங்குவதுகூட உணவுத் துறையை வளர்க்கும் சீரிய திட்டமல்ல; நீண்டகால நோக்கில் வட்டி சுமையையே அதிகரிக்கச் செய்யும். உணவுத் துறை முறையாக நிர்வகிக்கப்படாததால் நெருக்கடிக்கு உள்ளாகிவிட்டது என்று கூறி உணவு கார்ப்பரேஷன் – ரேஷன் விநியோக முறையை நிறுத்தக்கூடிய ஆபத்தும் உள்ளது.*
- *சுகாதாரம் மற்றும் கல்வித் துறைக்கும் போதுமான நிதி ஒதுக்கப்படவில்லை. கடந்த ஆண்டு ஒதுக்கப்பட்டது 3400 கோடி. இப்போது 300 கோடி மட்டுமே அதிகமாக ஒதுக்கப்பட்டுள்ளது.*
- *சமூகப் பாதுகாப்புத் திட்டங்களான ஓய்வூதியம், குழந்தைகளுக்கான அங்கன்வாடி சேவைகள், மதிய உணவுத் திட்டம் ஆகியவற்றுக்கும் மதிப்பீடு செய்யப்பட்ட தொகையைவிட மிகக் குறைந்த அளவே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*
- *இப்படி மக்களின் வாழ்வாதாரத் தேவையான சமூக நலத் துறைக்கு நிதி ஒதுக்கீடு கடுமையாக குறைக்கப்பட்டிருப்பதற்கு உள்நோக்கம் உண்டு. இந்தத் துறைகளை அரசு கை கழுவி, தனியார் துறைக்குக் கொண்டு போக முடிவு செய்து விட்டதாகவே தெரிகிறது. மாவட்ட தலைநகர்களிலுள்ள அரசு மருத்துவமனைகளில் தனியார் துறையும், இணைக்கப்படும் என்று நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அறிவித்திருப்பதிலிருந்தே அரசின் கொள்கை தனியார் துறையை வளர்ப்பதே என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.*
- *நாட்டில் உள்ள ஒரு சதவீத பணக்காரர்கள் 70 சதவீத மக்களின் செல்வத்தைப் போல் நான்கு மடங்கு வைத்துள்ளனர். கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு ஏற்கெனவே பல சலுகைகள் வாரி வழங்கிய பிறகும், கார்ப்பரேட் நிறுவனங்கள் செலுத்த வேண்டிய வரிகளில் 1.55 இலட்சம் கோடி வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.*
- *அரசுப் பொறுப்பில் இருந்து வரும் ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் (எல்.அய்.சி.) பங்குகள் தனியாருக்கு விற்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.*
- *தாழ்த்தப்பட்ட மாணவர்களின் உயர்கல்விக்கு வழங்கி வந்த கல்வி உதவித் தொகையும் குறைக்கப்பட்டு விட்டது.*

# பசு மாட்டுத் தோலில் தயாரிக்கும் ‘மிருதங்கத்தை’ பார்ப்பனர்கள் பயன்படுத்தலாமா?

டி.எம். கிருஷ்ணா, பார்ப்பனராகப் பிறந்தாலும் பார்ப்பனர்களை எதிர்க்கும் அதிசயமான கருநாடக இசைப் போராளி. கருநாடக இசையை குடிசைப் பகுதிகளுக்குக் கொண்டு சென்றவர். கானா பாடல்களையும், இஸ்லாமிய கிறிஸ்துவ மதப் பாடல்களையும் கருநாடக இசையில் அவர் இணைத்துப் பாடுகிறார். பார்ப்பனர்கள் பதறுகிறார்கள். ‘கருநாடக இசையில் ஜாதி’ என்ற நூலை அவர் ஏற்கனவே எழுதினார். பார்ப்பனர்கள் கொந்தளித்தார்கள். இப்போது கருநாடக இசையில் பயன்படுத்தப்படும் மிருதங்கம் குறித்து ஒரு ஆங்கில நூலை எழுதியிருக்கிறார். ‘செபாஸ்டியன் அண்ட் சன்ஸ், மிருதங்கம் தயாரிப்போரின் சுருக்கமான வரலாறு’ என்பது நூலின் பெயர். இந்த நூல் வெளியீட்டு விழாவுக்கு கலாக்ஷேத்திராவில் உள்ள அரங்கம் தேர்வு செய்யப்பட்டது. நிர்வாகமும் அனுமதி வழங்கியது.

மத்திய அரசின் நிதி உதவியுடன் இயங்கும் கலாக்ஷேத்திரா, சென்னை அடையாறு பகுதியில் பல நூறு ஏக்கர் நிலங்களை வளைத்துப் போட்டிருக்கிறது. நாட்டியக் கலை-இசைக் கலையை வளர்ப்பதே இந்த நிறுவனத்தின் நோக்கம். பார்ப்பனர் ஆதிக்கப் பிடியில் செயல்படும் இந்த நிறுவனம், டி.எம்.கிருஷ்ணா நூல் வெளியிட கடைசி நேரத்தில் அனுமதி மறுத்துவிட்டது. காரணம், இந்த நூல் பார்ப்பனர்களின் ஜாதி வகுப்பு வெறியை அம்பலப்படுத்துகிறது என்பதுதான். நூலிலிருந்து சில பகுதிகளை ‘இந்து’ ஆங்கில நாளேடு (ஜன. 30, 2020) வெளியிட்டுள்ளது. அதில் இடம் பெற்றுள்ள கருத்துகளின் சுருக்கம்:

இந்துக்கள் மாட்டுக்கறி சாப்பிட மாட்டார்கள் என்ற நம்பிக்கை உலகம் முழுதும் இருக்கிறது. பல இந்தியர்களும் இப்படி நம்பிக் கொண்டிருக்கிறார்கள். வேதகாலத்தில் ‘பிராமணர்கள்’ உள்ளிட்ட அனைவரும் மாட்டுக்கறி சாப்பிட்டார்கள் என்பதற்கு ஏராளமான சான்றுகள் உண்டு. இப்போதும் உலகில் மாட்டிறைச்சி ஏற்றுமதியில் முன்னிலயில் உள்ள ஐந்து நாடுகளில் இந்தியாவும் ஒன்று. பசுவைக் கொல்லக் கூடாது; அது புனிதமானது என்று பார்ப்பனர்கள் கூறுவது, பிற்காலத்தில் உருவான கருத்து தான். பார்ப்பனர்கள் மாட்டிறைச்சி சாப்பிட்டவர்கள்தான். ‘பிராமணர்கள்’ எண்ணிக்கையில் சிறுபான்மைதான். ஆனால் அவர்கள்தான் எது பண்பாடு என்பதைக் கட்டமைத்து பெரும்பான்மை மக்களின் பண்பாடாக மாற்றிக் காட்டுகிறார்கள். அரசியல் சட்டத்தின் நோக்கங்களை விளக்கும் வழிகாட்டும் நெறிகளில் பசுவைப் பற்றிய தங்களது கருத்தைத் திணித்து விட்டார்கள். வழிகாட்டும் நெறிமுறைகளுக்கு சட்ட அங்கீகாரம் இல்லை என்றாலும் பல மாநில அரசுகள் பசுவைக் கொல்லுவதை மாட்டுக்கறியை உண்பதை தடை செய்து சட்டம் இயற்றியிருக்கின்றன.

பாலக்காடு மணி அய்யர் ஒரு பிரபல மிருதங்க கலைஞர். ஆச்சாரம் மிக்க பார்ப்பன குடும்பத்தில் பிறந்த அவருக்கு நீண்டகாலமாக ஒரு மனப் போராட்டம் இருந்தது. கருநாடக இசைக் கச்சேரியின் தாள வாத்தியமான மிருதங்கம் - பசுமாடு, எருமை மாடு, ஆடு ஆகியவற்றின் தோல்களால் செய்யப்படுவதால் புனிதப் பசுவின் தோலைக் கொண்டு செய்த ஒரு தாள வாத்தியத்தை கச்சேரிகளில் பயன்படுத்தலாமா? அது ‘பாவம்’ அல்லவா என்பதே அவரது மனப் போராட்டம்.

மிருதங்கம் ஒரு ‘வேத வாத்தியம்’ என்று பார்ப்பனர்கள் புனிதமாகக் கருதுகிறார்கள். இது குறித்து காஞ்சி சங்கராச்சாரியிடம் கருத்து கேட்க முடிவு செய்தார் மணி அய்யர். சங்கராச்சாரியுடன் ஒரு சந்திப்பை ஏற்படுத்தித் தருமாறு இராஜ கோபாலாச்சாரியைக் (இராஜாஜி) கேட்டார். இராஜாஜியே மணிஅய்யரிடம் இதற்கு விளக்கம் கூறிவிட்டார். “நதி மூலம் ரிஷி மூலம் பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது என்பது நமது முன்னோர்கள் வகுத்த விதி. அதையே பின்பற்றுங்கள்” என்று கூறினார். (அனைத்து ஜாதியினரும் அர்ச்சகராகவேண்டும் என்றால் மட்டும் ‘பழக்க வழக்க’ங்களை மீற முடியாது என்று தடை போட்டு விடுவதும் இதே பார்ப்பனர்கள்தான். நதி மூலம் ரிஷி மூலம் பார்க்கக் கூடாது என்ற கருத்தை இதற்கு மட்டும் பொருத்திப் பார்க்க மாட்டார்கள் - மொழி பெயர்ப்பாளர்)

ஒரு பழமொழி அய்யருக்கு ஏதுவாக அமைந்து விட்டது. மணி அய்யரும் இந்தக் கருத்தில் திருப்தி அடைந்து விட்டார். மாட்டுத் தோலைப் பயன்படுத்தி



மிருதங்கத்தை உருவாக்கும் வேலையில் பார்ப்பனர்கள் ஈடுபடுவது இல்லை என்பதோடு, அது எப்படி தயாரிக்கப்படுகிறது என்பதைக் கண் கொண்டு பார்க்கவும் அவசியம் இல்லாதவர்கள் பார்ப்பனர்கள். எனவே தேவை என்று வரும்போது மனத்திரையிலிருந்து ‘புனிதப் பசுவை’ வசதியாக மறந்து விடுகிறார்கள். மிருதங்கத்தைத் தயாரிக்கும் தொழிலாளர்கள் எப்படித் தயாரிக்கிறார்கள் என்பதை மறந்து, பார்ப்பனர்களின் புனிதக் கோட்பாட்டுக்கு உதவி வருகிறார்கள்.

மிருதங்கத்தை தயாரிக்கும் ‘தொழிலாளர்களை’ புனிதமற்றவர்களாகவும் தீட்டுப்பட்டவர்களாகவும் கருதுகிறார்கள். மாட்டின் இரத்தத்தை வெளியே எடுத்து தோலை உரித்து பதப்படுத்தி மிருதங்கமாகத் தயாரிக்கும் தொழிலாளிகளை தங்களுக்கு ‘சமமாக’ மதிப்பதற்கு பார்ப்பனர்கள் தயாராக இல்லை.

“நாங்கள் செத்த மாட்டின் தோலுக்கு வாழ்க்கையைத் தருகிறோம்; மிருதங்கம் வாசிக்கப்படும்போது இந்தப் பதப்படுத்தப்பட்ட பசுவின் தோல்தான் சுருதியைத் தருகிறது. எனவே இந்தத் தொழிலை நாங்கள் விரும்பியே செய்கிறோம்” என்கிறார், மிருதங்க தயாரிப்பாளர் ரவிக்குமார்.

ஆனாலும், இவர்கள் உள்ளம் திறந்து பேசத் தயங்குகிறார்கள். துருவி துருவி கேட்கும்போது தான் பேசுகிறார்கள். ஒரு தயாரிப்பாளர், “நாங்கள் எப்போதும் பசு, ஆடுகளின் தோல்களுடன் தான் வாழ்கிறோம். மிருதங்கத்தை வாசிப்பவர்களில் பெரும்பாலோர் ‘பிராமணர்கள்’ அவர்களுக்கு இந்தத் தோல் வாடைப் பிடிக்காது; எப்படி தயாரிக்கிறோம் என்பதும் தெரியாது. ஆனால் நாங்கள் தயாரித்த இந்த தாள வாத்தியம் அவர்கள் பூஜை அறையில் இருக்கிறது. ஆனாலும் அதைத் தயாரித்து தரும் எங்களுக்கு மரியாதை இல்லை” என்றார். மற்றொரு மிருதங்கம் தயாரிக்கும் தொழிலாளி, “நான் எனது கால்களுக்கிடையே வைத்துதான் கருவியை தயாரிக்கிறேன். அதே கருவியைத்தான் அறைக்குள் கொண்டு போய் வைத்துக் கொண்டு ‘பிராமணர்கள்’ தெய்வமாக வணங்குகிறார்கள்” என்றார் (கால், பாதம் இரண்டுமே சடங்கு ரீதியாக தீட்டானது என்பதே பார்ப்பனிய கருத்தியல்).

மிருதங்க தயாரிப்புக்கான பசு மாட்டுத் தோலை தேர்வு செய்வதில் மிகவும் திறன் கொண்ட ‘அங்கத்தான்’ என்ற தொழிலாளியிடம் பாலக்காடு மணி அய்யர் மிருதங்கம் தயாரிக்கச் சொல்லி ரூ.100 முன் பணமாகக் கொடுத்தார். அந்தத் தொழிலாளி சிறந்த பசுமாட்டுத் தோலைத் தேர்வு செய்தபோது விலை கூடுதலாக இருந்தது. எனவே அய்யரிடம் காட்டி ஒப்புதல் பெற அவர் வீட்டு வாசலில் பசு மாட்டுத் தோலுடன் நின்றபோது அய்யர் ஆவேசமடைந்து, கேவலமான வார்த்தைகளால் திட்டி விரட்டினார். பார்ப்பனர்கள் மிருதங்கத்துக்கான மாட்டுத் தோல் தேவலோகத்திலிருந்து நேரே குதித்து வருவதாகக் கருதிக் கொண்டு இருக்கிறார்கள். மிருதங்கம் தயாரிக்கும் (தலித்) தொழிலாளர்கள் ஒவ்வொருவருமே இப்படி பார்ப்பனர்களிடம் அவமானப்படுத்தப்படுபவர்களாகவே இருக்கிறார்கள் - என்று நூலில் எழுதியிருக்கிறார் டி.எம். கிருஷ்ணா.

**ஆசிரியருக்குக் கடிதம்**

## வேத மந்திரங்களின் அர்த்தத்தை தமிழில் கூற ஏன் மறுக்கிறார்கள்?

பிறப்பின் அடிப்படையில் மட்டுமே ஒருவர் ‘இந்து’ என்று அடையாளப்படுத்தப்படுகிறார். இந்து ‘சனாதன தர்மம்’ இந்துக் கடவுள்களின் பிறப்பு, இந்து மத நூல்கள் குறித்து பெரும்பாலான இந்து மக்களுக்கு எதுவும் தெரியாது. அதன் காரணமாகத்தான் பார்ப்பனர்கள் சூழ்ச்சியாக, தங்கள் பார்ப்பனிய வேத மதத்தை இந்து மதம் என்று கூறி பார்ப்பனரல்லாத மக்களை ஏமாற்றி வருகிறார்கள். அர்ச்சகர் ஆகும் உரிமை தங்களுக்கே உண்டு என்று உச்சநீதிமன்றம் வரை சென்று வாதாடுகிறார்ககள். ஆனால் வழிபாடுமுறைகள் குறித்து புரோகிதர்களுக்கு தேர்வுகள் எதுவும் நடத்தப்படுவது இல்லை. கல்வித் தரத்தை உயர்த்த ‘நீட்’ தேர்வு 5ஆம் வகுப்புக்கு தேர்வு; 8ஆம் வகுப்புக்கு தேர்வு என்றெல்லாம் பேசுகிறவர்கள் அர்ச்சகர் புரோகிதர் ஆவதற்கும் ‘தகுதி’ வேண்டும். அதற்கான தேர்வு வேண்டும் என்றும் ஏன் வலியுறுத்துவது இல்லை?

அதேபோல் சமஸ்கிருதத்தில் புரோகிதப் பார்ப்பனர்கள் ஓதும் மந்திரங்களின் தமிழ்மொழி பெயர்ப்பை ஏன் மக்களிடம் எடுத்துச் சொல்லக் கூடாது? இந்தி திரைப்படம் ஓடினால் புரிந்து கொள்வதற்கு அதற்கு தமிழ் டைட்டில் போடப்படுகிறது. ஒரு ‘இந்து’ தனக்காக புரோகித பார்ப்பனர் ஓதும் மந்திரத்தைப் புரிந்து கொள்வதற்கு ஏற்பாடுகளை செய்ய வேண்டாமா? அப்படி தமிழில் மொழி பெயர்த்தால் சுயமரியாதையுள்ள எந்தத் தமிழனும் அர்ச்சனை செய்ய மாட்டான்; புரோகிதரை அழைக்க மாட்டான் என்ற அச்சம் தானே அவர்களைத் தடுக்கிறது?

கடவுளுக்கு வேத மந்திரம் ஓதும் புரோகிதர்கள் தங்கள் குடும்பத்துப் பெண்களையும் ‘பிராமணர்’களாகக் கருதி அர்ச்சனை செய்ய அனுமதிக்காதது ஏன்? சடங்குகளை வழிபாடுகளை முழுமையாக ஆண்களைவிட இந்து மதத்தில் நம்பிக்கையுள்ள பெண்கள் கண்டிப்பாகக் கடைபிடிக்கும்போது அர்ச்சகர் உரிமையை மட்டும் ஏன் மறுக்க வேண்டும்?

பார்ப்பனர்கள் வகுப்புவாதிகள், பெண்களின் உரிமைகளை மறுப்பவர்கள் என்பதற்கு இதைவிட சான்று வேண்டுமா?

**– மு. சாமிநான்,**
**நாமக்கல் மாவட்டத் தலைவர், திராவிடர் விடுதலைக் கழகம்**

## கழகத் தோழர்களே!

புரட்சிப் பெரியார்முழக்கம், நிமிர்வோம் இதழுக்கு சந்தா சேர்க்கும் இயக்கத்தை விரைவுப் படுத்துவீர்!

2020ஆம் ஆண்டில் இதழ்கள் தொடர்ந்து வெளிவர வேண்டிய பொறுப்பை தோழர்கள் உணர்வார்கள் என்று நம்புகிறோம்.

இயக்க இதழ்கள் தான் தோழர்களை இணைக்கும் இணைப்புச் சங்கிலி. தோழர்களின் செயல்பாடுகளை சுமந்து வரும் கழகத்தின் ‘தூது மடல்’.

ஒரு இயக்கம் உயிரோட்டமாக தன்னை இறுத்திக் கொள்வதற்கு இயக்க இதழ்களே சுவாசக் காற்று என்பது, நீங்கள் அறியாதது அல்ல!

தோழர்களே! விரைந்து செயல்படுங்கள்! பிப்ரவரி இறுதிக்குள் சந்தா சேர்ப்பு இயக்கத்தை நிறைவு செய்தாக வேண்டிய கடமை உணர்ந்து, களத்தில் இறங்குங்கள்!

# விடுதலை இராசேந்திரன் விளக்க உரை (4)

# ‘அகண்ட இந்துராஷ்ர’ கனவை செயல்படுத்தவே குடியுரிமை அடையாளங்களைக் கையில் எடுக்கிறார்கள்

*குடியுரிமைத் திருத்தச் சட்டம் – குடியுரிமை பதிவேடு – தேசிய மக்கள் தொகைப் பதிவேடுகளில் பா.ஜ.க. ஆட்சி அவசரம் காட்டுவது ஏன்? என்பதை விளக்கி ஜனவரி 4, 2020 அன்று, சென்னை தலைமைக் கழகத்தில் நடந்த ‘நிமிர்வோம்’ வாசகர் வட்டத்தில் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் உரை யாற்றினார். அவரது உரையிலிருந்து:* (சென்ற இதழ் தொடர்ச்சி)

தற்போது சுப்ரயமணிசாமி அயோத்தி வரலாறும் இந்து மறுமலர்ச்சியும் என்ற நூல் எழுதியிருக்கிறார். இந்த நூலில், ‘இந்திய நாட்டினுடைய வரலாற்றை புராணங்களின் அடிப்படையில் எழுத வேண்டும். நமக்கு முன் நமது வரலாற்றை எழுதியவர்கள் நமது அந்நியர்கள். நாம் எழுதுகிற வரலாறு புராணங்களின் வரலாறாக இருக்க வேண்டும்’ என்று சுப்ரமணியசாமி எழுதியுள்ளார். சுப்ரமணியசாமி எதனடிப்படையில் இப்படி எழுதுகிறார்? எதனால் புராணங்களின் படி இந்தியாவை வரையறுக்க வேண்டும்? என்று கூறுகிறார். இந்த சிந்தனை யாரிடமிருந்து சுப்ரமணியசாமிக்கு வருகிறது? ஆர்.எஸ்.எஸ்-இன் குரு கோல்வாக்கரின் சிந்தனையில் இருந்து தான் சுப்ரமணியசாமிக்கு இந்த கருத்து வந்துள்ளது. ஆக குரு கோல்வாக்கர் இவர் கூறுவதுபோல் புராணங் களின் அடிப்படையில் இந்து இராஷ்டிரத்தை வரையறுக்கிறார். எப்படி வரையறுக்கிறார்? புராண அடிப்படையில் இந்து தேசத்தை எப்படி வரை யறுப்பது? கோல்வாக்கரின் மொழியிலேயே கூறுகிறேன்:

“நமது தாய்நாடு எவ்வளவு தூரம் பரந்து, விரிந்து கிடக்கிறது என்பதைத்தான் நமது **புராணங்களும் இதிகாசங்களும்** சுட்டிக் காட்டுகின்றன.

இன்றைய ஆப்கானிஸ்தான், நமது பழைய உபகானஸ்தான்; மகாபாரதத்தில் வரும் சால்யா, ஆப்கானிஸ்தானத்திலிருந்து வந்தவரே. நவீன காபூலும், காந்தாரமும் அன்றைக்கு ‘காந்தார தேசமாக’ இருந்ததுதான். அந்த நாட்டை (ஆப்கானிஸ்தான்)ச் சார்ந்தவர் தான், கவுரவர்களின் தாயாகிய காந்தாரி. ஈரான் கூட ஆரிய தேசமே. அதன் முந்தைய அரசன் ரேஷாஷா பெலாவி முஸ்லீமாய் இருந்தார் என்பதைவிட ஆரியராக இருந்தார் என்பதுதான் உண்மை... கிழக்குப் பகுதியைப் பார்த்தால், பர்மா என்பது நமது பழைய பிரதேசமே... தெற்கே திரும்பினால், இலங்கை மிக நெருங்கிய தொடர்புடையது. இந்தியா என்ற பெரும் நிலப் பரப்பிலிருந்து எப்போதுமே வேறுபடுத்திப் பார்க்கப்படாதது திபெத். நமது ‘திரி வாஸ்தவம்’ தான் நமது தலைவர்களால் சீனப் பிரதேசம் என்று அழைக்கப்படுகிறது. அது பரமேஸ்வரின் கைலாயம்; கடவுளின் பூமி.” (ஆதாரம்: Bunch of thoughts என்ற கோல்வாக்கரின் தமிழ்மொழி பெயர்ப்பு நூலான ‘சிந்தனைக் கொத்து’ நூல்)

தனித் தனி நாடுகள் உருவாகிய பிறகும் எவ்வித வரலாற்று சான்றுகளும் இன்றி புராணங்களில் வரும் பெயர்களை எடுத்துக் கொண்டு வேறு நாடுகளுடன் வெவ்வேறு மொழிகளில் ஒலிக்கும் பெயர்களை மட்டுமே தொடர்புபடுத்தி, அதையே வரலாறு என்கிறார் கோல்வாக்கர்

நாடுகளுக்கான எல்லைகளை நாம் ஏற்க முடியாது என்று கூறும் கோல்வாக்கர், அது மனசாட்சிக்கு செய்யும் துரோகம்; வெட்கக் கேடு என்று எழுதுகிறார்.

“இன்றைய அரசியல் எல்லைகள்தான் நமது முழுமையான தாயகத்தினைக் குறிக்கிறது என நாம் நினைப்போமானால், நமது மனசாட்சிக்கு துரோகம் செய்தவர்கள் ஆவோம். இப்படி ஒப்புக் கொண்டால் நமது அறிவுக்கு இதைவிட வெட்கக்கேடு ஏதுமில்லை.” (ஆதாரம்: மேற் குறிப்பிட்ட அதே ‘சிந்தனைக் கொத்து’ நூல்)

கோல்வாக்கரின் வரையறையில் சீனாவும் ஈரானும் இந்து நாடுகள்; அந்த நாடுகளின்மீது படையெடுத்து, இந்தியாவுடன் இணைக்க வேண்டும் போலிருக்கிறது. அதற்கு ஆதாரம் புராணங்கள்.

பாகிஸ்தான், பங்களாதேஷ், ஆப்கானிஸ்தானில் வாழும் இந்துக்களை இங்கே அழைத்துக் கொள்ளவும், இந்தியாவில் வாழும் முஸ்லிம்கள் ‘அன்னியர்கள்’ என்ற உளவியலைக் கட்டமைப்பது தான். குடியுரிமைத் திருத்தச் சட்டம், குடியுரிமைத் தேசியப் பதிவேடுகளை செயல்படுத்துவதுதான் நோக்கம்.

புராணங்களை வரலாறுகளாக்கும் ஒரு கூட்டம்



இந்த நூற்றாண்டிலும் வெட்கமின்றி எழுதுகிறது; பேசுகிறது.

பா.ஜ.க.வை எதிர்த்தால் - பார்ப்பனர்களை விமர்சித்தால் - எச். ராஜா போன்ற பார்ப்பனர்கள் ‘இந்திய எதிர்ப்பாளர் (anti-Indian) என்று வசைப் பாடுவதை வழக்கமாக்கிக் கொண் டுள்ளனர். திமிரும், பார்ப்பன ஆணவமும் கொழுத்து திரிகிறது இந்தக் கூட்டம். அதிகார மமதையில் ஊறி நிற்கும் ‘சங்கி’ பார்ப்பனர்கள், ‘இந்தியா’ என்பதையே ஏற்றுக் கொள்ளாத ‘தேச பக்த’ கும்பல், பா.ஜ.க.விலிருந்து சங்பரிவார் துணை அமைப்புகள் வரை ‘இந்தியா’ என்பதை ஏற்பதே இல்லை. ‘பாரதிய’ என்ற சொல்லை மட்டுமே பயன்படுத்துவார்கள். ‘அவாள்’ கண்ணோட் டத்தில் ‘இந்தியா’ என்பது ‘தீட்டு’. கோல்வாக்கர் இந்தியா என்ற சொல்லையே பயன்படுத்தக் கூடாது என்று எழுதி வைத்திருக்கிறார். அந்த அடிப்படையிலேயே ‘இந்தியா’ என்ற சொற்றொடரும் அரசியல் சட்டமும் அவர்களுக்கு கசக்கிறது.

ஆர்.எஸ்.எஸ். கொள்கைப் பிரகடனத்திலும் ‘இந்தியா’ என்ற சொல்லை இவர்கள் பயன்படுத்து வது கிடையாது. ஆர்.எஸ்.எஸ். கொள்கை அறிக்கை என்ன கூறுகிறது?

> “இந்து சமூகத்திலுள்ள பல்வேறு கூட்டத்தாரையும் ஒன்றுபடுத்துவது, ‘தர்மம்’, ‘சான்ஸ்கிருதி’ என்ற அடிப் படையில் இந்து சமூகத் துக்கு புத்துயிர் ஊட்டி புணருத்தாரணம் செய்வது, ‘பாரத் வர்ஷத்’தின் பன்முக வளர்ச்சியை சாதிப்பது என்பதே ‘சங்’கத்தின் நோக்கங்களும், இலட்சி யங்களும் ஆகும்”.

- இந்த கொள்கை அறிக்கையில் ‘இந்தியா’ என்ற சொல்லே இடம் பெறவில்லை. இந்து சமூகம் என்றே குறிப்பிடுகிறார்கள்.

இவர்களுக்கு கொள்கை வகுத்துத் தந்த கோல்வாக்கருக்கு ‘இந்தியா’ பற்றிய கருத்து என்ன?

> “பாரதியா என்பது நம்முடைய பழமையான பெயர். நமக்கு நினைவு தெரியாத காலம் முதல் இந்தப் பெயர் இருந்திருக் கிறது. வேதத்தில்கூட இந்தப் பெயர் இடம் பெற்றுள்ளது. நமது புராணங்கள்கூட, நமது தாய்நாட்டை ‘பாரத்’ என்றும் நமது மக்களை ‘பாரதியர்கள்’ என்றும் குறிப்பிட்டுள்ளது. உண்மை யில் ‘பாரத்’ என்பது ‘இந்து’ என்பதுதான்.
>
> இன்று பாரதியம், பாரத் என்ற சொற்கள் கூட தவறான பொருளில் பயன்படுத்தப் படுகின்றன. இந்தியா – இந்தியர் என்ற சொல்லுக்கு மாற்றாக அதைப் பயன்படுத்து கிறார்கள். ‘இந்தியன்’ என்ற சொல் இந்த நாட்டில் வாழும் முஸ்லிம், கிறிஸ்தவர், பார்சி போன்ற பல்வேறு சமூகத்தவரையும் சேர்த்துத் தான் குறிக்கிறது. நம்முடைய சமூகமான ‘இந்து’வை மட்டும் குறிப்ப தில்லை. ‘பாரதிய’ என்ற சொல்லை மற்ற சமூகத் தினரையும் இணைத்துக் கொள்ளும் சொல்லாக குறிப்பிடுகிறார்கள். எனவே தான், இந்து என்ற குழப்ப மில்லாத சரியான சொல்லையே இப்போது நாம் பயன்படுத்துகிறோம். (ஆதாரம் : கோல்வாக்கர்-ஆர்.எஸ்.எஸ். அதிகார பூர்வ ஏடான ‘ஆர்கனைசர்’ ஏடு 1.12.1449)

பாரதிய ஜனதா கட்சியின் துணை அமைப்புகளை எடுத்துக் கொண்டாலும் சரி, ஆர்.எஸ்.எஸ் இன் துணை அமைப்புகளை எடுத்துக் கொண்டாலும் சரி அவைகள் பாரதிய என்றுதான் இருக்குமே தவிர இந்தியா என்று எந்த அமைப்பின் பெயரிலும் வராது. இந்தியா என்ற சொல்லையே ஏற்க மறுக்கின்ற ஒரு கூட்டம் தான் இந்தியாவில் Anti indian, Anti Indian என்று பூணூலைப் பிடித்துக் கொண்டு பேசிக் கொண்டிருக்கிறார்கள் கோல்வாக்கர் கூறுகிறார்: “இன்று பாரதியம், பாரத் என்ற சொற்கள் கூட தவறான அர்த்தத்தில் பயன்படுத்துகிறார்கள். இந்தியா, இந்தியன் என்று பயன்படுத்துகிறார்கள். இந்தியன் என்ற சொல் இங்கே வாழுகிற முஸ்லிம், பார்சி, கிருத்துவர்களையும் சேர்த்துத் தான் குறிக்கிறது. நம்முடைய சமூகமான இந்துவை மட்டும் குறிப்பது கிடையாது. நம்முடைய சமூகத்தை மட்டும் குறிப்பிடும் பாரதிய என்ற சொல்லை மற்ற சமூகத்தினரையும் குறிப்பிடும் சொல்லாக குறிப்பிடுகிறார்கள். இது மிகப்பெரிய தவறு. எனவே ‘பாரதியம்’ என்று குறிப்பிடுவதா இந்தியன் என்று குறிப்பிடுவதா என்ற குழப்பம் உள்ளது எனவேதான் நாம் இப்போது குழப்பமே இல்லாத ‘இந்து’ என்ற சொல்லைப் பயன்படுத்துகிறோம்’ என்று எழுதி வைத்திருக்கிறார்.

தேசியக் கொடியைப் பற்றி எழுதுகிறார், ‘ஏற்கெனவே நமக்கான காவிக் கொடி ஒன்று உள்ளது. அதைவிட்டுவிட்டு இப்போது ஏன் புதிதாக ஒரு தேசியக் கொடியை உருவாக்க வேண்டும்’ என்றும் அவர் எழுதுகிறார். இதை 1.12.1919 organiser இல் அவர் எழுதியிருக்கிற கருத்து. கோல்வாக்கர், ஜெர்மனில் ஹிட்லர் பேசிய இனவாதம் தான் சரியானது என்று ஒப்புக் கொண்டுள்ளார். கோல்வாக்கர் மீண்டும் கூறுகிறார், ‘ஜெர்மன் இனப் பெருமை இன்று உலகம் முழுதும் பேசப்படுகின்றது. அது தனது தூய்மையான கலாச்சாரத்தைக் காக்க யூதர்களை வெளியேற்றி உலகத்தையே அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது. இதுதான் ஒரு இனத்தை பெருமையாக்கும் மிக உயர்ந்தபட்ச நடவடிக்கை’. இஸ்லாமியரை வெளியேற்றுவதில் தான் இந்து இனத்தின் பெருமை அடங்கியிருக்கிறது என்பதை கூறுவதற்கு ஹிட்லர் ஆட்சியை காரணம் காட்டுகிறார்’, கோல்வாக்கர்.

ஆதாரங்களுடன் நாம் எடுத்துக் காட்டுகிறோம்; சவால் விட்டுக் கேட்கிறோம்; இதை உங்களால் மறுக்க முடியுமா? அரசியல் சட்டத்தையே தேசியக் கொடியையோ நாட்டின் எல்லை வரையறைகளையோ ஏற்க முடியாது என்ற உங்களின் உண்மையான கொள்கைகளை மக்களிடம் வெளியே வந்து பேசுவீர்களா?

கோல்வாக்கர் கூறுகிறார்:

> “ஆழமான வேறுபாடுகளைக் கொண்ட வெவ்வேறு இனங்களையும் கலாச் சாரங்களையும் ஒன்றுபடுத்தவே முடியாது என்பதை ஜெர்மன் நிரூபித்திருக்கிறது. இந்துஸ்தானத்தில் வாழும் நமக்கு இது ஒரு படிப்பினை”.

ஆக ஹிட்லர் பேசிய இனவாதத்தை சரி என்று அப்படியே எடுத்துக் கொண்டு கோல்வாக்கர் ‘We or our nationhood defined’ இல் பதிவு செய்திருக்கிறார். தற்போது சமஸ்கிருதத்திற்குப் பதிலாக இந்தியைத் திணிக்கிறார்கள். இந்தி திணிப்பை பற்றி பெரியார் சொல்கிறார், இந்தியை ஏன் பார்ப்பனர்கள் திணிக்கிறார்களென்றால், இந்தியைத் திணிப்பதன் மூலம் சமஸ்கிருதத்தை இந்த நாட்டிற்குள் கொண்டுவருவதன் முன்னோட்டமே, என்று 1920 களிலேயே எழுதியிருக்கிறார்.

ஆர்.எஸ்.எஸ் இனுடைய அதிகாரப்பூர்வ கருத்து அதாவது கோல்வாக்கர் மொழிக்கொள்கையில் என்ன சொல்கிறார், “சமஸ்கிருதம் நமது ஆட்சி மொழியாகும் வரை இந்திக்கு முன்னுரிமை கொடுத்து நமது ஆட்சி மொழியாக நமது வசதிக்காக வைத்துக் கொள்ளலாம்”. (As a solution to the problem of ‘Lingua franca’ till the time Sanskrit takes that place we shall have to give priority to Hindi on the score of convenience). சமஸ்கிருதம் ஆட்சிமொழியாக வரும் வரை வசதிக்காக நாம் இந்தியை ஆட்சி மொழியாக பயன்படுத்திக் கொள்ளலாம். என்பதுதான் அவருடைய மொழிக் கொள்கையாக இருக்கிறது.

மோடி ஆட்சியில், மாநிலங்களின் உரிமையை ஒவ்வொன்றாக பறித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று நாம் பேசிவருகிறோம். மொழிக்கொள்கை, கல்வி, ஜி.எஸ்.டி இப்படி மாநில உரிமைகளைப் பறித்து ஒற்றை ஆட்சியாக மாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்று நாம் சொல்லிக் கொண்டிருக்கிறோம். இவற்றையெல்லாம் மோடியோ, பாஜகவோ புதியதாக உருவாக்கவில்லை. இவையெல்லாம் கோல்வாக்கரின் சித்தாந்தத்தில் இருந்து இந்த சிந்தனைகள் வருகின்றன. மொழி வழி மாநிலங்கள் பிரிக்கப்பட்ட நேரத்தில் 1957 ஆம் ஆண்டு மொழி வழி மாநிலங்களாக இந்தியா பிரியக் கூடாது ஒற்றை தேசமாக இந்தியா இருக்க வேண்டும் என்று கூறியவர்கள் ஜன சங்கத்தினர்.

1957 ஆம் ஆண்டு ஜன சங்கத்தின் தேர்தல் அறிக்கையில், “ஜனசங்கம் ஆட்சிக்கு வந்தால் அரசியல் சட்டத்தை திருத்தி கூட்டாட்சி முறையை ஒழித்து இந்தியாவை ஒரே நாடு என்று பிரகடனப் படுத்துவோம்’ என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இதை கோல்வாக்கரும் கூறியிருக்கிறார். இந்தியாவை ஒற்றை தேசமாக மாற்றுவோம் என்பது ஆர்.எஸ்.எஸ் இன் கொள்கை. ஆர்.எஸ்.எஸ் இன் அரசியல் பிரிவான ஜன சங்கத்தின் கொள்கையும் அது தான்.

- தொடரும்

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# நாச்சியார் கோயில் கழகக் கூட்டத்தில் கழகத்தினர் வழங்கிய ரூ.30,000 நிதி




பெரியாரின் 41 ஆவது நினைவு நாள் கூட்டம் 1.2.2020 அன்று சனிக்கிழமை மாலை 7 மணியளவில் தஞ்சை மாவட்டம் நாச்சியார் கோவில் வடக்கு வீதியில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. மாவட்டத் தலைவர் சாக்கோட்டை இளங்கோவன் தலைமையிலும் தலைமைக் குழு உறுப்பினர் இளைய ராஜா மற்றும் சோலை மாரியப்பன் முன்னிலையிலும் தொடங்கியது. கூட்டத்திற்கு, குடந்தை ஒன்றிய அமைப்பாளர் வெங்கடேசன் வரவேற்புரையாற்றினார். அதனைத் தொடர்ந்து தஞ்சை மாவட்ட செயலாளர் கு. பாரி, நாகை மாவட்ட செயலாளர் தே.மகேஷ், மனிதநேய மக்கள் கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர் ராஜ்முகமது , சிவபுரம் மாணவர் கபிலன் ஆகியோர் உரையாற்றினர் .

அதனைத் தொடர்ந்து நாச்சியார் கோவில் தி.வி.க . கிளைக் கழகம் சார்பில் இரண்டாவது தவணையாக ரூ.30,000 (முப்பதாயிரம் மட்டும்) கழகத் தலைவர் தா.செ. மணியிடம் வழங்கப்பட்டது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரை நிகழ்த்தினார். ஒன்றரை மணி நேரத்திற்கும் மேலாகவே பேச்சு நீடித்த போதும் வந்திருந்த பெருந்திரளான மக்கள் சிறிதும் கலைந்து செல்லாது அமைதியாக இருந்து செவிமடுத்தது கூட்டத்தின் சிறப்பு நிகழ்வு. நிறைவாக திருவிடைமருதூர் ஒன்றிய அமைப்பாளர் மா.கரிகாலன் நன்றி கூறினார் . நினைவு நாள் கூட்டத்தினை நாச்சியார் கோவில் அனைத்துக் கட்சித் தோழர்களும் ஒன்றிணைந்து சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்கள்.

திரு. நாகேசுவரம், பெரியார் பற்றாளரும், ஆண்டுதோறும் பெரியார் பிறந்த நாள் விழாவை சிறப்பாக நடத்தி வருபவருமான தமிழ்மணியும், கழகத் தலைவரிடம் தோழர்கள் சார்பில் நிதியை வழங்கினர்.

(முதல்பக்கத் தொடர்ச்சி)

ஆனால் ஏன் திருவள்ளுவருக்கு காவிச் சாயம் பூசுகிறார்கள்? தமிழ் மரபை கையகப்படுத்து வது நேர்மையோடு செய்ய வேண் டிய வேலை. அதற்கு குறுக்கு வழிகள் கிடையாது. நீங்கள் குறுக்கு வழிகள் எவ்வளவு கையாண்டாலும் அந்த மரபு உங்களுக்கு எதிரானது. வைதீகத்தின் மீது நின்று கொண்டு, வேதப் பண்பாட்டின்மீது நின்றுக்கொண்டு, இதுதான் இந்திய வரலாறு என்று சொல்லிக் கொண்டே தமிழை அணுகினால் உங்களால் அதை நெருங்க முடி யாது.

இவ்வாறு சு.வெங்கடேசன் கூறினார் : “சரஸ்வதி சிந்து நாகரிகத்தின் பட்டறைகளும், ஹரப்பன் முத்தி ரைகளும் குறிப்பிடத்தக்கவை” என்று தனது பட்ஜெட் உரையில் குறிப்பிட்ட நிர்மலா சீதாராமன், சிந்து நாகரிக கால சித்திர எழுத் துக்கள் மூலம் எழுதப்பட்ட சில சொற்களுக்கும் அவர் பொருள் கூறினார். சரஸ்வதி சிந்து நாகரிகம் சுமார் கி.மு. 4000ஆவது ஆண்டுக்கு முற்பட்டது என்றும் குறிப்பாக இந்த முத்திரைகள் கி.மு 3300ஆவது ஆண்டைச் சேர்ந்தவை என்றும் நிர்மலா சீதாராமன் கூறினார். ‘ஷ்ரேனி’ என்றால் ‘பட்டறை’ என்றும் முத்திரையில் காணப்படும் ‘சேட்டி’ எனும் சொல்லுக்கு ‘மொத்த வியாபாரி’ என்றும் பொருள், ‘பொத்தார்’ எனும் சொல்லின் பொருள் ‘கருவூ லத்தில் கனிமங்களின் அளவை மதிப்பிடுபவர்’ என்று கண்டறியப்பட்டுள்ளது என்று நிர்மலா தனது உரையில் குறிப்பிட்டார். தமிழக எம்.பி.க்கள் எதிர்ப்பு தனது உரையின்போது ஒரு முறை சிந்து நாகரிகம் என்று கூறிய நிதியமைச்சர், பின்னர் அதைத் திருத்தி ‘சரஸ்வதி சிந்து நாகரி கம்’ என்று குறிப்பிட்டார். இந்தத் தகவல்களை நிதி யமைச்சர் வாசித்தபோது, தமிழக மக்களவை உறுப்பினர்கள் அமர்ந்திருந்த பகுதியில் எதிர்ப்புக் குரல்களும் எழுந்தன.

நாகரிகத்தின் அடிப்படை அடையாளம் செங்கலும், பானையும் கண்டுபிடித்ததில் இருக்கிறது. ஆனால் வேதத்தில் செங்கலையும் பானையையும் செய்பவர்களை அசுரர்கள் என்று வசை பாடப்படுகிறார்கள். பின் எப்படி உங்களை நாகரிகவாதி என்று உரிமை கொண்டாடுகிறீர்கள்? உங்களுக்கும் சிந்துவெளிப் பண்பாட்டுக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது? சடங்குகளுக்காக ஆங்காங்கே கற்களையும் சுடாத செங்க லையும் பயன்படுத்தி ஹோமம் செய்து, பின்னர் கலைத்து விட்டுப் போகிற பழக்கத்தைத்தான் வேத காலத்தில் பார்க்க முடிகிறது. சடங்குகள் பற்றிய வேத இலக்கிய குறிப்பில் சதபத பிரா மணத்தில் அக்னிசேனா என்ற சடங்கிற்குத்தான் முதன் முதலில் செங்கலைப்பற்றிய குறிப்பே வருகிறது. அதற்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சிந்துவெளி நாகரிகத்தில் சுட்ட செங்கல் பயன்பாட்டுக்கு வந்துவிட்டது. இன்றைய கீழடி கண்டுபிடிப்பிலும் சுட்டசெங்கல் பயன் பாட்டினை பார்க்க முடியும். எனவே இது வரை நிரூபிக்கப் பட்ட வரலாற்றினை புராணங்களோடு இணைத்து உங்களின் கதை களை தேசத்தின் வரலாறாக மாற்ற நினைக்காதீர்கள். ஔவை தனது ஆத்திச்சூடியில் “மண் பறித்து உண்ணேல்” என்பாள். வரலாறும், பண்பாடும் கொண்ட மனிதக் கூட்டத்தின் வாழ்விடம்தான் மண். அதனை ஒரு போதும் அதிகாரத்தால் பறித்து விட முடியாது, என்றார் நாடாளுமன்ற உறுப்பினர் சு. வெங்கடேசன்.

# மடத்துக்குளம் பகுதியில் குடியுரிமைச் சட்ட ஆபத்துகளை விளக்கி பரப்புரை



காந்தியார் படுகொலை நாளை முன்னிட்டு, 30.1.2020 அன்று உடுமலை. மடத்துக்குளம் பகுதியில் காலை 9 மணி முதல் இரவு 8 மணி வரையில் உடுமலை மடத்துக்குளம் முற்போக்காளர் கூட்டமைப்பு சார்பாக காந்தி படுகொலை நாள் CAA., NRC., NPR. எதிர்ப்புப் பரப்புரை பயணமாக நடத்தப்பட்டது. வேன்கள், இரு சக்கர வாகனம் மூலம் திராவிடர் விடுதலைக் கழகத் தலைமைக் குழு உறுப்பினர் இரா. மோகன் தலைமையில் துவங்கியது. குமரலிங்கம், மடத்துக்குளம், கணியூர், காரத் தொழுவு, துங்காவி, பூளவாடி, குடிமங்கலம், பெதப்பம்பட்டி, கொங்கல் நகர், முக்கோணம் பகுதி, குட்டை திடல், இறுதியாக உடுமலை சித்தரக் கூடம் ஆகிய பகுதிகளில் மக்களின் ஆதரவுடன் சிறப்பாக நடைபெற்றது.

பரப்புரை பயணத்தில், இந்திய ஜக்கிய கம்யூனிஸ்ட் , ஆதி தமிழர் பேரவை, விடுதலைச் சிறுத்தைகள், தமிழர் பண்பாட்டு இயக்கம், திராவிடர் கழகம், திராவிடர் விடுதலைக் கழகம், திராவிடர் தமிழர் கட்சி ஆகிய அமைப்புகளைச் சேர்ந்த தோழர்கள் கலந்து கொண்டனர். இறுதியில் கழகப் பொருளாளர் துரைசாமி பரப்புரை பயணத்தை நிறைவு செய்து, கலந்து கொண்ட அனைவருக்கும் நிமிர்வோம், கழக வெளியீடு நூல்களையும் வழங்கினார்.

# ‘கற்க கல்வி’ அறக்கட்டளை சார்பில் மணியம்மையார் நூற்றாண்டு விழா – பொதுக் கூட்டம்




‘கற்க கல்வி’ அறக்கட்டளை சார்பாக 02.02.2020 அன்று மாலை 6 மணியளவில் அன்னை மணியம்மையார் நூற்றாண்டு விழா மற்றும் தமிழ் வழியில் பயிலும் 2000 மாணவர்களுக்கான கல்வி உதவி வழங்கும் விழாவும், சென்னை எம்.ஜி.ஆர் நகர் மார்க்கெட் பகுதியில் நடைபெற்றது. கற்க கல்வி அறக்கட்டளை செயலாளரும், திராவிடர் விடுதலைக் கழக தலைமைக் குழு உறுப்பினருமான கரு அண்ணாமலை நிகழ்விற்கு தலைமை வகித்தார். திவிக தலைமைக் குழு உறுப்பினர் கு. அன்பு தனசேகர் நிகழ்வை ஒருங்கிணைத்தார். ப.அமர்நாத் வரவேற்புரை யாற்றினார்.

‘விரட்டு’ வீதி நாடகக் குழுவினர், 'Article 21' அனைவருக்கும் கட்டாய கல்வி சட்டம் என்ற தலைப்பில், தேசிய கல்விக் கொள்கையின் ஆபத்தை விளக்கும் வகையில் வீதி நாடகத்தை நிகழ்த்திக் காட்டினர். அதைத் தொடர்ந்து, மருத்துவர் எழிலன், மா.சுப்பிரமணி (தென் சென்னை மேற்கு மாவட்ட திமுக செயலாளர்), வழக்கறிஞர் எஸ். துரைசாமி (துணைத் தலைவர் தந்தை பெரியார் திராவிடர் கழகம்), கொளத்தூர் மணி (தலைவர் திராவிடர் விடுதலைக் கழகம்), நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி ஆகியோர் மாணவர்களுக்கான கல்வி உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றினர்.

55 வருட பட்டின் பாரம்பரிய ஸ்தாபனம்...
சிந்தாமணி சில்க்ஸ்
கைத்தறி திருமண பட்டு சேலை தயாரிப்பாளர்
& மொத்த விற்பனையாளர்
ஹோல்சேல் கடை
சிந்தாமணியூர், ஓமலூர் வழி, சேலம்.(DT).
04290 248304/ 90952 48304
chinthamanisilks | www.chinthamanisilks.com

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
ஆண்டுக்கட்டணம்
ரூ.200
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
✆ 7373684049

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 6th February 2020

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN